©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 5]

சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 10, 2010
தை 28, திருவள்ளுவர் ஆண்டு–2041

## பகுதி VI—பிரிவு 1இன் இணைப்பு

### துறைத் தலைவர்களுடைய அறிவிப்புகள்

**1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு 140 (1)–ன்கீழ் ஜி.2159. ஆண்டார்குப்பம் விவசாய சேவை கூட்டுறவு சங்கத்தின் பதிவினை ரத்து செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 3293/07/சப1.)*

முதன்மை வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியின் கடிதம் ந.க. 87/88–89/அ.9(1) நாள் 01–11–2007–ன்படி ஜி.2159, ஆண்டார்குப்பம் விவசாய சேவை கூட்டுறவு சங்கத்தினை இறுதி முடிவு கட்டுதல் குறித்த அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, மேற்படி கலைக்கப்பட்ட ஜி.2159, ஆண்டார்கும்பம் விவசாய சேவை கூட்டுறவு சங்கத்தின் பதிவு எண் 1983–ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 140(1)–ன்கீழ் ரத்து செய்து ஆணையிடப்படுகிறது.

இந்த ஆணை 17–12–2007 முதல் நடைமுறைக்கு வருகின்றது. இந்த ஆணை எனது கையொப்பமும் அலுவலக முத்திரையிட்டு 2007ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், 17–ம் நாள் வழங்கப்படுகிறது.

பொன்னேரி,
2007 டிசம்பர் 17.

**பெ. பழனிநாதன்,**
*துணைப்பதிவாளர்.*

**1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவின்கீழ் டிஒய்டி. 850. வள்ளுவர் நகர் அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினை கலைத்தல் மற்றும் கலைப்பு அலுவலர் நியமனம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 3581/இ2/09.)*

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்திலுள்ள டிஒய்டி. 850 வள்ளுவர் நகர் அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் நடைமுறைகளை 1983–ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 137 (2) (பி)–ன்கீழ் துணைப் பதிவாளர் (பால்பதம்), திருநெல்வேலி 2010–ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கலைத்து ஆணையிட்டு மேற்படி சட்டப்பிரிவு 138 (1)–ன்கீழ் துணைப்பதிவாளர் (பால்பதம்), திருநெல்வேலி அலுவலகத்திலுள்ள கூட்டுறவு சார்பதிவாளர் (கலைத்தல்) திருநெல்வேலி, இச்சங்கத்தின் அதிகாரபூர்வமான கலைத்தல் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி,
2010 ஜனவரி 12.

**இரா. முத்துகிருஷ்ணன்,**
*துணைப்பதிவாளர் (பால்பதம்).*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-1 (T-Sup.) (5)—1